40

Servants of India Society, Madras

கனம் கோகலே யவர்களது

# ஆதாரக்கல்வி மசோதாவும்

ராஜப்ரதிநிதியார் சபையில்

அவர் திருவாய்மலர்ந்தருளிய

## ப்ரஸங்கமும்

ஒரு தமிழ் மொழிபெயர்ப்பு

MADRAS:

THE GUARDIAN PRESS, MOUNT ROAD

# ம-ள-ள-ஸ்ரீ கோகலேயின் மூலாதா[ர]
# கல்வியைப்பற்றின மசோதா

இந்தியாவுக்கு இப்போது வேண்டியது இதுதா[ன்]
உங்களால் கூடிய சகாயத்தைத்
தயவுசெய்து செய்யுங்கள்

முக்கியமான 12 விஷயங்கள்

பலவந்தப்படுத்தி ப்ரைமரி படிப்பைத் தேசமெங்கும் பரவச் செய்வதுதான் மசோதாவின் கருத்து.

*பிராக்கெட்டுகளுக்குள்ளிருக்கிற நம்பர்கள் மசோதாவின் ஸெக்ஷன்களையும், ஸப் செக்ஷன்களையும் காண்பிக்கின்றன.*

1. இந்த மசோதா அனுமதியை மாத்திரம் கொடுக்கிறது: *பலவந்தப்படுத்தி ஆரம்பப் படிப்பு சொல்லிவைக்கவேண்டிய இடங்களைக்குறிப்பிட லோகல் சங்கத்தாருக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அப்படிக் குறிப்பிடுவது அவர்கள் இஷ்டம்.* [1, (2) 3 & 4]
2. முதலில் பிள்ளைகளுக்கு மாத்திரமே: *ஆரம்பத்தில் பையன்களுக்குமாத்திரம் கட்டாய ரூலைப் பிரயோகிக்கலாம். பிறகு வேண்டியபோது பெண்கல்வி விஷயத்திலும் இந்த ரூலை அமுலுக்குக் கொண்டுவரலாம்.* [17]
3. ஏழைகளுக்குச் சம்பளமில்லை: *சம்பளம் கொடுக்க முடியாமல் அதிக ஏழையாயிருப்ப*

# மூலாதாரக் கல்வியைப் பரவச்செய்வதற்காக இன்னும் நன்ருய் நிபந்தனை ஏற்படுத்துவதற்கான மசோதா ஆக்ட்.

---

மூலாதாரக் (எலிமென்டெரி) கல்வியைப்பரவச் செய்வதற்காக இன்னும் நன்ருய் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிறதென்னவென்ருல்:—

சுருக்கமான பெயரும், வழங்கத் தொடங்குவதும்வியாபகமும்.

1 (1) இந்த ஆக்டை, மூலாதாரக் கல்வியைக் குறித்த 1911-ம் ஸூத்து ஆக்ட் என்று சொல்லலாம்.

(2) இது - [ -ம்ஸூ மீ வ] பிரயோகத்துக்கு வரவேண்டும்; ஆனுல் இது 3-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தினுல் எந்தப் பிரதேச விஸ்தீர்ணங்களுக்குப் பிரயோகிக்கப்படுமோ அந்தப் பிரதேச விஸ்தீர்ணங்கள் தவிர மற்ற இடங்களில் பிரயோகிக்கப்படமாட்டா.

(3) இது ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது.

2. இந்த ஆக்டிலே, சங்கதியினுலாவது முன் பின் தொடர்ச்சியினுலாவது விரோத மொன்றுமில்லாவிட்டால்,—

அர்த்தம்.

"தாய் அல்லது தகப்பன்" என்பதில் சம்ரக்ஷகரென்பதும் யாதொரு குழந்தையை ஆதரிக்கக்கடன்பட்டிருக்கிறவர் அல்லது யாதொரு குழந்தையை வாஸ்தவத்தில் தம் வசத்திலிருக்கிறவர் என்பதும் அடங்கும்:

"(டிபார்ட்மென்ட் ஆவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்) பொதுஜன வித்தியா விசாரணை இலாகா" என்பது—சம்பந்தப்பட்ட முனிஸிபாலிடி அல்லது ஜில்லா போர்ட் எந்த மாகாணத்திலிருக்கிறதோ அந்த மாகாணத்தைச்சேர்ந்த பிரதேசக் கவர்ன்மெண்டாருக்குட்பட்டுப் பொதுஜன வித்தியா விசாரணை வகிக்கும் இலாகா என்று அர்த்தமாகும்:

"மூலாதாரக்கல்வி" என்பது—மூலாதாரக் (எலிமென்டெரி) கல்விச்சாலைகளுக்காகப் பொதுஜன வித்தியா விசாரணை இலாகாதாரரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும் வாசகம்,

MADRAS.

எழுத்து, கணிதம் ஆகிய இவைகளிலும், வேறே பாடங்கள் எவையேனும் இருந்தால் அந்தப் பாடங்களிலும் பாடமுறைகள் என்று அர்த்தமாகும்:

"ஜில்லா போர்ட்" என்பதில், " ஜில்லா லோகல் போர்ட் " என்பதும், "ஜில்லா (கவுன்ஸில்) சபை " என்பதும் அடங்கும்:

" மாஜிஸ்ட்ரேட் " என்பதில் ஒரு கிராம மாஜிஸ்ட்ரேட் என்பது அடங்காது.

கட்டாயமாய்க் கல்வி கற்க வேண்டிய பிரதேசங்களைப் பற்றிய விளம்பரம்.

3. பிரதேசக் கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொண்டும், இதுவிஷயத்தில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் ஏற்படுத்தக் கூடிய விதிகளுக்குட்பட்டும், ஒவ்வொரு முனிஸிபாலிடியாரும் அல்லது ஜில்லா போர்டாரும் அப்போதைக்கப்போது விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாக, தங்களுடைய அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள்ளிருக்கும் விஸ்தீர்ணம் முழுவதுக்குமாவது அதில் குறித்த யாதொரு பாகத்துக்காவது இந்த ஆக்ட் பிரயோகப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கலாம். அதன்மேல்

இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் அப்பிரகாரமே அப்படிப்பட்ட விஸ்தீர்ணத்துக்காவது பாகத்துக்காவது பிரயோகப்படும்.

குழந்தையைக் கல்விச்சாலைக் கனுப்பதாய் அல்லது தகப்பன் கடமைப் பட்டிருப்பது.

4. இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற ஒவ்வொரு பிரதேசத்திலும், அந்தப் பிரதேசத்துக்குள் வாசஞ்செய்து கொண்டு ஆறு வயதுக்குக் கீழ்ப்படாமலும் பத்து வயதுக்கு மேற்படாமலுமுள்ள ஒவ்வொரு பிள்ளையும் வருஷத்தில் எத்தனை தினங்களுக்குக் கல்விச்சாலைக்குப் போகவேண்டுமென்றும் அந்தப்படி போகும் ஒவ்வொரு தினத்திலும் எவ்வளவுகாலம் அங்கே இருக்க வேண்டுமென்றும் பொதுஜன வித்தியா விசாரணை இலாகாதாரரால் நிர்ணயிக்கப்படுகிறதோ அத்தனை தினங்களுக்கும் அவ்வளவு காலத்துக்கும் அந்தப் பிள்ளை கல்விச்சாலைக்கு வராமலிருப்பதற்கு நியாயமான காரணமிருந்தாலன்றி மற்றப்படி, அந்தப்பிள்ளையை மூலாதாரக் கல்விக்காக ஏற்பட்டுள்ள ஒரு அங்கீகாரமான கல்விச்சாலைக்குப் போகும்படி செய்வது அவனுடைய தாய் அல்லது தகப்பனுடைய கடமையாகும்.

MADRAS.

கல்விச்சாலைக்குப்போகாதது இன்ன படிக்கானால் மன்னிக்கத் தக்கதாகு மென்பது.

5. கல்விச்சாலைக்குப் போகா மைக்கு அடியிற்கண்ட சந்தர்ப் பங் களி லெதுவாவது ஒரு நியாயமான் காரணமாகும் :—

(a) பிள்ளை போகக்கூடியதும், தாய் அல்லது தகப்பன்மதசம்பந்தமான காரணங்களைக்கொண்டு அந்தப் பிள்ளையை அனுப்ப ஆட்சேபனைக்கிட மில்லாததுமான அங்கீகாரமான கல்விச்சாலை யொன்று அந்தப்பிள்ளையின் வாசஸ்தலத்தி லிருந்து அதிசமீபமான ரஸ்தா மார்க்கமாய் அள ந்து பார்க்கும்போது ஒரு மைல் தூரத்துக்குள் இல்லையென்பது ;

(b) வியாதி, துர்ப்பலம், கிருகக்காரியம், விவசாய சம்பந்தமாய்ப் பருவகாலங்களில் நேரி டும் ஆவசியகங்கள் ஆகிய இந்தக் காரணங்களி னாலாவது போதுமான வேறே காரணத்தினாலா வது குழந்தை கல்விச்சாலைக்குப் போக முடி யாதபடி தடுக்கப்பட்டிருக்கிறதென்பது ;

(c) திருப்திகரமான வேறே யாதொரு வித மாக அந்தக் குழந்தை கல்வி கற்றுவருகிற தென்பது.

குழந்தையை வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாதென்று தடுப்பது

6. இந்த ஆக்டின்படி கல்விச் சாலைக்குப்போய்க் கல்வி கற்று வர வேண்டிய எந்தப் பிள்ளையையாகிலும் ஒருவரும் தம்மிடத்தில் வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது.

கல்விச்சாலைக்குப் போதுமான வசதியிடம் ஏற்படுத்திக்கொடுக்கப்பிரதேச சங்கத்தார் கடமைப்பட்டிருப்பது.

7. இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற ஒவ்வொரு பிரதேசத்திலும் முனிஸிபாலிடியாராவது ஜில்லா போர்டாராவது பொதுஜன வித்யாவிசாரணை இலாகாதாருக்கு அவசியமானதாகவும் போதுமானதாகவும் தோற்றுகிற கல்விச்சாலை வசதியிடம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

பிரதேசச் சங்கத்தார் விசேஷ வித்யாவரி விதிக்கலா மென்பது.

8. மேலே சொன்ன யாதொரு பிரதேசத்திலே, முனிஸிபாலிடியாராவது ஜில்லா போர்டாராவது பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு விசேஷ வித்தியாவரி ஒன்று விதிக்கலாம்; அதில் வசூலாகும் தொகையை, அந்தப் பிரதேசத்தில் வாசஞ்செய்யும் பிள்ளைகளுக்கு மூலாதாரக் கல்வி ஏற்பாடு செய்வதற்காகவே பிரத்தியேகமாய் உபயோகிக்கவேண்டும்.

9. (1) 4 - வது பிரிவின்படி கல்விச்சாலைக்

ஏழ்மைத்தனம் காரணமாகப் பள்ளிக்கூடச் சம்பளங்களை வஜா செய்து விடுவது.

குப் போகவேண்டியவனுயிருக்கிற ஒரு பிள்ளையின் தாய் அல்லது தகப்பனுடைய மாதாந்த வருமான மான துபத்து ரூபாய்க்கு மேற்படா விட்டால் அந்தப் பிள்ளைக்குக் கல்வி கற்பிப்ப தற்காகச் சம்பளம் வாங்கக்கூடாது.

(2) மற்ற ஒவ்வொரு விஷயத்திலும் முனி ஸிபாலிடியாராவது ஜில்லா போர்டாராவது 4 - வது பிரிவின்படி கல்விச்சாலைக்குப் போக வேண்டியவனுயிருக்கிற ஒரு பிள்ளைக்காக அவ னுடைய தாய் அல்லது தகப்பன் செலுத்தத் தக்க சம்பளம் முழுவதையுமாகிலும் அதில் யாதொரு பாகத்தையாகிலும் ஏழ்மைத்தனம் காரணமாகவோ வேறே போதுமான காரணமாக வோ வஜாசெய்து விடலாம்.

பிள்ளைகளைக்கல்விச் சாலைக்குப் போகச்செய்வதற்கான கமிட்டியாரை நியமிப்பது.

10. (1) இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற ஒவ் வொரு பிரதேசத்துக்கும், முனிசிபாலிடியாராவது, ஜில்லா போர்டாராவது பிள்ளைகளைக் கல்விச்சாலைக் குப் போகச் செய்வதற்கான கமிட்டியொன்றை நியமிக்கவேண்டும்; இது விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சகாயச்சட்

டங்களினுல் நிர்ணயிக்கப்படும் விதமாக அந்தக் கம்மிட்டி அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

(2) இது விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சகாயச்சட்டங்களுக்குட்பட்டு, பிள்ளைகளைக் கல்விச்சாலைக்குப் போகச்செய்வதற்கான கம்மிட்டியார் தங்களுடைய பிரதேசத்துக்குள்ளே கல்விச்சாலைக்குப்போய்க் கல்வி கற்றுவரவேண்டிய ஒவ்வொரு பிள்ளையையும் கல்விச்சாலைக்குப் போகும்படிசெய்வது அந்தக் கம்மிட்டியாருடைய கடமையாகும்.

தாய் அல்லது தகப்பன் மேல் பிராது செய்வது.

11. (1) பிள்ளைகளைக் கல்விச்சாலைக்குப் போகச் செய்வதற்கான கம்மிட்டியார் தங்களுடைய பிரதேசத்திலே கல்விச்சாலைக்குப் போகவேண்டியவனுயிருக்கிற ஒரு பிள்ளை அந்தப்படி போகவில்லையென்று திருப்திகரமாய்த் தெரிந்துகொள்ளும்போதெல்லாம், அவர்கள் கிரமமாய் எச்சரிக்கை செய்தபிறகு, அந்தப் பிள்ளையின் தாய் அல்லது தகப்பன்மேல் ஒரு மாஜிஸ்ட்ரேட்டின்முன் பிராது செய்யலாம்.

(2) அந்தப்பிராது உண்மையானதென்று மாஜி

கல்விச்சாலைக்குப் போகும்படி உத்தரவு.

ஸ்ட்ரேட் திருப்திகரமாகத் தெரிந்து கொண்டால், அவர் ஒரு உத்தரவு பிறப்பித்து அந்தஉத்தரவுமூலமாக, குறித்த ஒரு தேதிக்கு முன்னே அந்தப் பிள்ளையைக் கல்விச்சாலைக்குப் போகும்படிச் செய்ய வேண்டுமென்று தாய் அல்லது தகப்பனுக்குக் கட்டளையிடவேண்டும்.

தாய் அல்லது தகப்பன் மேல் பிராது தொடருவது.

12. (1) அந்த உத்தரவின்படி நடக்காமலிருந்து, அந்தப்படி நடக்காமலிருப்பதற்குத் திருப்திகரமான காரணமெதுவும் இருப்பதாகப்பிள்ளைகளைக் கல்விச்சாலைக்குப் போகச்செய்வதற்கான கம்மிட்டியாருக்குத் தோற்றுவிட்டால், அவர்கள் அந்த உத்தரவின்படி நடக்கத் தவறின தாய் அல்லது தகப்பன்மேல் ஒரு மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் பிராது தொடரலாம்.

கல்விச்சாலைக்குப் போகும்படி செய்யப்பட்ட உத்தரவின்பிரகாரம்நடக்கா விட்டால்தண்டனை.

(2) தாய் அல்லது தகப்பன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், இரண்டு ரூபாய்க் கதிகப்படாமல் அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

13. அடிக்கடி (அந்த உத்தரவின் பிரகாரம்)

அடிக்கடி அந்தப்படி நடக்காதிருந்து வந்தால் தண்டனை.

நடக்காதிருக்கிற விஷயங்களிலே, தாய் அல்லது தகப்பன் குற்றவாளியென்று தீர்மானிக்கப் படுவதன் மேல், பத்து ரூபாய்க் கதிகப்படாமல் அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

வேலைக்குவைத்துக்கொள்கிற வருடைய உத்தரவாதம்.

14. (1) பிள்ளைகளைக் கல்விச்சாலைக்குப்போகச் செய்வதற்கான கம்மிட்டியார் 6-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் வேலைக்கு வைத்துக்கொள்ளுபவர் மேல் கிரமமான எச்சரிக்கை செய்த பிறகு, பிராது தொடரலாம்.

(2) வேலைக்கு வைத்துக்கொள்ளுகிற அப்படிப்பட்டவர்—

பிள்ளையின் வாசஸ்தலத்திலிருந்து அதி சமீபமான ரஸ்தாமார்க்கமாய் அளந்து பார்க்கும்போது ஒருமைல் தூரத்துக்குள்ளே அங்கீகாரமான கல்விச்சாலை எதுவும் இல்லையென்றுவது,

அந்தப்பிள்ளை வேலைக்கு வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் காலத்தையும் அவன் செய்ய வேண்டிய வேலையின் தன்மையையும் நோக்கும்போது, அவன் கல்விச்சாலையிலே மூலாதாரக் கல்வி கற்கவொட்டாதபடி தடுக்கப்படவில்லையென்றுவது,

வேறே யாதொரு திருப்திகரமான விதமாக அந்தப் பிள்ளை கல்விகற்று வருகிறானென்றாவது,

வயது வாஸஸ்தலம் முதலிய திட்டங்கள் விஷயமாய்ப் பொய்யான சங்கதி தெரிவித்ததன்மேல் அந்தப்பிள்ளை வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டானென்றாவது,

தமக்குத் தெரியாமலும் தம்முடைய சம்மதி பெறாமலும் அந்தப்பிள்ளையைத் தம் கீழ் வேலையாயிருக்கும் யாதொரு ஏஜெண்டாவது (காரியஸ்தராவது) வேறே வேலையாளாவது வேலைக்கு வைத்துக்கொண்டாரென்றும், அவர்மேல் பிராது தொடருவதற்காக அவசியமான சௌகரியங்கள் செய்துகொடுக்கத் தாம் இஷ்டப்படுகிறாரென்றாவது,

மாஜிஸ்ட்ரேட்டுக்குத் திருப்திகரமாய்க் காட்டக் கூடியவராயிருந்தாலன்றி மற்றப்படி அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன் மேல், இருபது ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

15. இந்த ஆக்டுக்கு விரோதமாக ஒரு பிள்

*வேலைக்கு வைத்துக்கொள்பவருடைய ஏஜென்டின் உத்தரவாதம்*

ளையை வேலைக்கு வைத்துக்கொள்ளும் காரியமானது வேலைக்கு வைத்துக்கொள்ளுகிறவரின் யாதொரு ஏஜென்டினுலாவது வேலையாளினுலாவது வாஸ்தவத்தில் செய்யப்பட்டால், அந்த ஏஜென்ட் அல்லது வேலையாளானவர் வேலைக்கு வைத்துக்கொண்டவராயிருந்தால் என்ன அபராதத்திற்கும் என்ன விதமாகவும் உட்பட்டவராயிருப்பாரோ அதே அபராதத்துக்கும் அதே விதமாகவும் உட்பட்டவராவதோடுங்கூட, என்ன திட்டங்களுக்கு உட்பட்டவராயிருப்பாரோ அதே திட்டங்களுக்கும் உட்பட்டவராவார்.

*கட்டாயமான படிப்பினின்றும் நிவாரணை.*

16. பிரதேச கவர்ன்மெண்டார் குறித்த சில வகுப்பாருக்காவது ஜன சமூகத்தாருக்காவது இந்த ஆக்ட் பிரயோகப்படாதபடி நிவாரணை செய்யலாம்.

*இந்த ஆக்ட் பெண்களுக்குப் பிரயோகப் படுவது.*

17. எந்தப்பிரதேசத்தின் விஷயமாக 3-வது பிரிவின்படி ஒரு விளம்பரம் பிறப்பிக்கப் பட்டிருக்கிறதோ அப்படிப் பட்ட யாதொரு பிரதேசத்திலே, முனிஸிபாலிடியாராவது ஜில்லா போர்டாராவது பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்

கொண்டும் இதுவிஷயமாய் ஆலோசனை சபையி லுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் செய்யப்படும் விதிகளுக்குட்பட்டும் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாகப் பிள்ளைகளுக்குச் சம்பந் தப்பட்ட முந்திய நிபந்தனைகள் அந்தப்பிரதேசத் துக்குள் வாசஞ்செய்யும் பெண்களின் விஷயத் திலும் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படும் ஒரு தேதிமுதல் பிரயோகப்படவேண்டுமென்று நிர்ணயிக்கலாம்; அதன்மேல் ஷை நிபந்தனை கள் அப்பிரகாரமே பெண்கள் விஷயத்திலும் பிரயோகப்படும்.

ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விதிகள் ஏற்படுத்துவது.

18. (1) ஆலோசனை சபையிலு ள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை அமு லுக்குக் கொண்டுவருவதற்காக விதி கள் ஏற்படுத்தலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்குப் பாதகமில்லாமலும், அப் படிப்பட்ட விதிகளிலே—

(a) சந்தர்ப்பத்துக்கேற்றபடி 3-வது பிரிவின் படியாவது 17-வது பிரிவின்படியாவது யாதொரு பிரதேசத்தில் கல்விச்சாலைக்குப் போய்க் கல்வி கற்கவேண்டிய பிள்ளைகள் அல்லது பெண்கள்

விஷயமாய் விளம்பரம் பிறப்பிக்கப் படுவதற்கு முன்னமே நூற்றுக்கு இத்தனை பிள்ளைகள் அல்லது இத்தனை பெண்கள் கல்விச்சாலைக்குப் போய்க் கல்வி கற்றுவரவேண்டு மென்பதை நிஷ்கரிஷை செய்வதற்காகவும்,

(b) இந்த ஆக்டின்படி மூலாதாரக் கல்வி ஏற்பாடு செய்வதற்காகப் பிடிக்கும் செலவை இன்ன சங்கியாபரிமாணப்படி சந்தர்ப்பத்துக்கேற்ற பிரகாரம் முனிஸிபாலிடியார் அல்லது ஜில்லா போர்டாரும் பிரதேச கவர்ன்மெண்டாரும் பிரித்துக்கொள்ள வேண்டுமென்று நிர்ணயிப்பதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்தலாம்.

(3) இந்தப் பிரிவின்படி விதிகள் ஏற்படுத்துவதற்கான அதிகாரமானது முன்னமே அந்த விதிகளைப் பிரசித்தம் பண்ணின பிறகு அவைகளை ஏற்படுத்த வேண்டுமென்னும் திட்டத்துக்குட்பட்டதாகும்.

சகாய சட்டங்கள் ஏற்படுத்த அதிகாரம்

19. யாதொரு முனிஸிபாலிடியாராவது ஜில்லா போர்டாராவது பிரதேசக் கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப்பெற்றுக்கொண்டு, சகாயச் சட்டங்கள் ஏற்படுத்தலாம்; அச்சட்டங்களினால்—

(a) பிள்ளைகளைக் கல்விச்சாலைக்குப் போகச் செய்வதற்கான கம்மிட்டியை இன்னவிதமாய் அமைக்கவேண்டு மென்பதையும், அதில் இத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டு மென்பதையும், அவர்களின் கடமைகள் இன்னவையென்பதையும், அவர்கள் இன்னவிதமாய் வேலை நடத்தவேண்டுமென்பதையும்,

(b) பிள்ளைகளைக் கல்விச்சாலைக்குப் போகச் செய்வதற்கான கம்மிட்டியார் குழந்தைகளைக் கல்விச்சாலைக்குப் போகும்படி செய்வதற்காக இன்ன ஏற்பாடுகள் செய்யலா மென்பதையும் நிர்ணயிக்கலாம்.

## இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

---

இந்தத்தேசத்து மூலாதாரக்கல்விமுறையில் கட்டாயமாய்ப் படிக்கவேண்டுமென்னும் கோட்பாட்டைப் படிப்படியாய்க் கொண்டுவருவதற்காக ஏற்பாடு செய்வதே இந்த மசோதா ஆக்டின் நோக்கமாகும். பொதுஜனங்களுக்குள்ளே மூலாதாரக்கல்வி விஸ்தாரமாய்ப் பரவுவதை ஸ்திரப்படுத்துவதற்குக் காரியசாதகமான ஒரே வழி எதுவென்றால், ஏதோ ஒருவகையாய்க் கட்டாயமுறையைக் கைக்கொள்வதேயாகும்; இந்த உண்மையானதுஇதர தேசங்களில் உண்டான அனுபவத்தினல் நிர்விவாதமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே இந்த மார்க்கத்தில் ஒரு ஆரம்ப முயற்சியாவது செய்வதற்கேற்ற காலம் இப்போது வந்திருக்கிறது. இதுவிஷயமாய்க் கேவலம் அனுமதி கொடுப்பதே இந்த மசோதா ஆக்டின் லட்சணமாயிருக்கிறது; மேலும், இதிற்கண்ட நிபந்தனைகள் முனிஸிபாலிடியாரால் அல்லது ஜில்லா போர்டாரால் விளம்பரம் பிரசுரிக்கப்படும் பிரதேசங்களுக்கே பிர

யோகமாகும்; இதற்காக வேண்டியிருக்கும் அதிகச் செலவில் இந்தியா கவர்ன்மெண்டார் விதிபூர்வகமாய் ஏற்படுத்தும் பாகத்தை ஷை மியுனிஸிபாலிடியார் அல்லது ஜில்லாபோர்டார் ஏற்கவேண்டிவரும். அல்லாமலும், பிரதேசக் கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் எந்தப் பிரதேசத்தின் விஷயமாகவும் விளம்பரம் பிரசுரிக்கக்கூடாது; பின்னும், அந்தப்பிரதேசத்தின் எல்லைகளுக்குள் ஏற்கனவே பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகள் நூற்றுக்கு இத்தனைபேர் இருக்கிறார்களென்னும் விஷயமாய் இந்தியாகவர்ன்மெண்டார் விதிபூர்வகமாய் ஏற்படுத்தக்கூடிய சோதனைப் பிரமாணத்தின்படி சகல அம்சங்களும் மேற்படி பிரதேசத்தில் பூர்த்தியாய் அமைந்திருக்க வேண்டும். கடைசியாக, இந்தநிபந்தனைகள் முதலில் பிள்ளைகள் விஷயத்திலேயே பிரயோகப்பட வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருந்தாலும், போகப் போக யாதொரு பிரதேசச் சங்கத்தார் அவைகளைப் பெண்கள் விஷயத்திலும் பிரயோகப்படும்படி செய்யலாம்; இதற்காகப் பிரேரேபிக்கப்பட்டிருக்கும் வயது வரையறை ஆறு முதல் பத்துவருஷம் மாத்திரமேயாகும். இவைகள் பிரதேசச் சங்கத்தார்கள் மூர்க்கத்தனமாயாவது அவிவேகமாயாவது யாதொரு காரியமும் செய்யாமலிருப்பதற்குப் போதுமான பாதுகாப்பாயிருக்குமென்று நம்பலாகிறது. இந்தச்சட்ட ஏற்பாட்டை முக்கியமாய் எச்

சரிக்கையோடு செய்திருக்கிறது—வாஸ்தவத்திலே, அது மட்டுக்கு மிஞ்சின எச்சரிக்கையுடன் செய்திருக்கிறதென்னும் குற்றம் அதிலிருப்பதாகச் சிலருக்குத் தோற்றலாம்.

1892-ம்வூத்திய ஐர்லாந்து தேசத்துக்கல்வியைப் பற்றிய ஆக்டையும், 1870-ம், 1876-ம்வூங்களின் இங்கிலாந்து தேசத்துக்கல்வியைப்பற்றிய ஆக்டையும் பெரும்பாலும் ஆதாரமாகக்கொண்டு இந்த மசோதா ஆக்டின் நிபந்தனைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

**பகுதிகள் 1, 2.**—இவைகளைப்பற்றி அபிப்பிராயக் குறிப்பு ஒன்றும் எழுத வேண்டிய அவசியமில்லை.

**பகுதி 3.**—இந்த மசோதா ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட பிரதேசங்களுக்குப் பிரயோகப்படுத்துவதற்காக இந்தப்பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

**பகுதி 4.**—விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட யாதொரு பிரதேசத்திலே ஆறுவயது முதல் பத்து வயதுவரையிலுள்ள பிள்ளையின் தாய் அல்லது தகப்பனுவது சம்ரக்ஷகராவது நியாயமான காரணமில்லாத பக்ஷத்திலே, அங்கீகாரமான ஒரு கல்விச்சாலையில் அந்தப்பிள்ளையைப் படிப்பிக்கும்படியான கடமையை அவருக்கு இந்தப் பகுதியில் ஏற்படுத்தியிருக்கிறது; மேலும், இன்னின்ன சந்தர்ப்பங்கள் நியாயமான காரணமாகலாமென்று 5-ம் பகுதியில் நிர்ணயித்திருக்கிறது.

**பகுதி 6.**—கூலிவேலைக்கு ஆள்களை வைத்துக்

கொள்ளுகிறவர்கள் இந்த மசோதா ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி கல்விச்சாலைக்குப்போய்க் கற்றுவர வேண்டிய பிள்ளையை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாதென்று இந்தப்பகுதியில் தடுத்திருக்கிறது.

**பகுதி** 7.—8.—முனிஸிபாலிடியாரும் ஜில்லா போர்டாரும் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட யாதொரு பிரதேசத்திலே கல்விச்சாலைக்குப் போதுமான வசதியிடம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று இந்தப் பகுதியில் கண்டிருக்கிறது; மேலும், அவர்கள் பிரதேச கவர்ன்மெண்டார்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்வதற்குட்பட்டு, விசேஷ கல்விவரியொன்று விதிப்பதற்கு 8-வது பகுதியில் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

**பகுதி** 9.—ஏழைத்தாய் தந்தைகளும் சம்ரக்ஷகர்களும் தங்களுடைய பிள்ளைகளுக்காகப் பள்ளிக்கூடச் சம்பளங்களைச் செலுத்தவேண்டியதில்லையென்று நிவாரணை செய்வதற்காக இந்தப் பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

**பகுதி** 10.—விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட பிரதேசங்களிலே பிள்ளைகளைக் கல்விச்சாலைக்குப் போகச்செய்வதற்கான கம்மிட்டியார்களை நியமிப்பதற்கு இந்தப் பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

**பகுதி** 11 முதல் 15 வரையில்.—இந்த மசோதா ஆக்டில் விதித்திருக்கிறபடி தங்கள் பிள்ளைகளை நியாயமான காரண மில்லாமலிருக்கையில் பள்ளிக்கூடத்துக்குப் போகும்படி செய்யத் தவறுகிற தாய் தந்தையர்

விஷயத்திலும் சம்ரக்ஷகர்கள் விஷயத்திலும், இந்த மசோதா ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் நடக்கிற வேலைக்கு வைத்துக்கொள்ளுகிறவர்கள் விஷயத்திலும் அவர்களுடைய ஏஜென்டுகள் அல்லது வேலையாட்கள் விஷயத்திலும் விதிக்கவேண்டிய அபராத தண்டனைகளைப்பற்றியும், அவைகளைச் செலுத்தும்படி கட்டாயப் படுத்துவதற்காக நடத்தவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றியும் இந்தப் பகுதிகளில் நிபந்தனை கண்டிருக்கிறது.

**பகுதி 16.**—குறித்த சில வகுப்பார்கள் அல்லது ஜனசமூகத்தாருக்கு இந்த மசோதா ஆக்ட் பிரயோகப்படாதபடி அவர்களைப் பிரதேச கவர்ன்மெண்டார் நிவாரணை செய்யக்கூடியவர்களாயிருப்பதற்கு இந்தப் பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

**பகுதி 17.**—ஆறு வயது முதல் பத்து வயது வரையிலுள்ள பெண்களுக்கும் இந்த மசோதா ஆக்டிற் கண்ட நிபந்தனைகளைப் பிரயோகப்படும்படி செய்ய இந்தப் பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

**பகுதிகள் 18, 19**—இந்தியா கவர்ன்மெண்டார் விதிகளேற்படுத்துவதற்கும் பிரதேசச் சங்கத்தார்கள் சகாயச்சட்டங்கள் ஏற்படுத்துவதற்கும் இந்தப் பகுதிகளில் நிபந்தனை கண்டிருக்கிறது.

1911-ம் ௵ பெப்ரவரி ௴ 28௳. ஜி. கே. கோகலே.

---

## மூலாதாரக் கல்வியைப்பற்றிய மசோதா ஆக்டு

இந்தியா கவர்னர் ஜனரல் சட்ட நிரூபண சபையில் 1911 ஹு மார்ச்சுமீ 11உ மேற்கண்ட மூலாதாரக் கல்வியைப்பற்றின மசோதாவைக் கொண்டுவரும்பொழுது கனம் மிஸ்டர் கோகலே பலதேசங்களில் மேற்பட்ட கல்வி கொடுக்கப்பட்டுவரும் விமர்சையைக் கணக்கால் ஒத்திட்டுப் பின்வருமாறு பேசுகிறார்:—

மகாபிரபுவே "படிப்பு விஷயங்களுக்காக ஒருதனி டிபார்ட்மெண்டு இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்படுத்தினதே எலிமெண்டரி படிப்பைத் தேசம் முழுவதிலும் பரவச்செய்வதற்கு ஸரியானகாலம் வந்துவிட்டது என்பதைக் காண்பிக்கிறது. இந்தக் கீழ்ப்படிப்பு தேசமெங்கும் வியாபிக்கவேண்டுமென்ற இத்தேசத்தாரின் ஆசையானது இந்தியப்பத்திரிகைகளின் மூலமாகவும், சென்ற டிசம்பர் மாதம் அலஹபாத்தில் நடந்த இந்திய நாஷனல் காங்கிரஸ் சபையின் தீர்மானங்களினாலும், நாகப்பூரில் நடந்த மகம்மதிய ஸங்கத்தின் தீர்மானங்களினாலும், பலமாயிருக்கிறது மாத்திரமல்லாமல் நாளுக்குநாள் விருத்தியடைந்து வருகிறதென்றும் நாம் அறிகிறோம். இந்தியா கவர்ன்மெண்டில் கல்வி விஷயத்துக்காக ஒருடிபார்ட்டுமெண்டு பிரத்தியேகமாக வைத்தது, கல்வியைத் தேசமுழுவதும் பரவச் செய்வதற்காகவென்று சென்ற ஜூலைமாஸம் இந்தியா அண்டர் சிக்

ரெட்டரி காமன்ஸ் சபையில் சொன்னதும், காங்கிரஸ் ஸபையோர் தங்களுக்கு(மிண்டோ பிரபுவுக்கு) அட்ரஸ் கொடுத்தபோது தாங்கள் கல்வி சம்பந்தமாக விசேஷார்த்தத்தோடு சொன்ன பதிலும், சென்ற மாஸம் கனம் மிஸ்டர் பட்லர் அலஹபாத்தில் கூட்டிய கல்விச்சங்கமும், இவைகளெல்லாம் கல்வியைத் தேசமெங்கும் பரவச் செய்வதில் தாங்கள் துரிதப்பட வேண்டுமென்பதை அறிந்து கவர்ன்மெண்டார் சாதாரண ஜனங்களுக்குக் கூட கல்வி கற்பிப்பதற்குத்தகுந்த ஏற்பாடுகளைச் சீக்கிரம் செய்யப் போகிறார்களென்பதை காட்டுகிறது. ஆகவே, கல்வி விஷயத்தில் என் பில்லில் (Bill) சொல்லிய பிரகாரம் நாம் முன் செல்ல வேண்டியது அவசியமென்பதைக் கவுன்ஸிலாருக்கும் ஜனங்களுக்கும் காட்டுவதற்கு இதுவே தகுந்த ஸமயமென்று எனக்குத் தோன்றுகிறது. நான் இப்போது கொண்டுவந்திருக்கிற பில் ஜனங்களுக்குப் படிப்பைக் கட்டாயப்படுத்தி சொல்லிக் கொடுப்பதற்காகவே.

லோகத்தா ரெல்லோரையும் திடுக்கிடச்செய்யும் தேவதுந்துபி என்ற உத்க்ருஷ்டமான சங்கம் எனக்கு அகப்படுமானால் அதை அவர்கள் காது கொப்புளிக்க ஊதி, "உங்கள் குழந்தைகளைப் படிப்பியுங்கள், குழந்தைக ளெல்லோரையும் படிப்பியுங்கள், உங்கள் குழத்தைகள் ஒவ்வொருவரையும் படிப்பியுங்களெனச்சொல்வேன்" என்று ஐம்பதுவருஷங்களுக்கு முன்னதாகவே அமெரிக்கா தேசத்து மஹானொருவர்

சொல்லியிருக்கிருர். அவருக்குத் தோன்றிய விசேஷ அபிப்ராயத்தை எல்லோரும் அங்கீகரிப்பது மல்லாமல் ஒவ்வொரு நாகரீகம் பெற்ற ராஜாங்கத்தாரும் தங்கள் தேசத்திலுள்ள எல்லாக் குழந்தைகளையும் படிப்பிப்பது தங்கள் பிரதான கடமையாக ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள். எலிமெண்டெரி படிப்பின் பலன் எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வதோடே நின்று விட்டாலும், இவ்வளவு மாத்திரமாவது எல்லோருக்கும் தெரியச்செய்வது ஒருபெரிய காரியம். ஏனென்ருல் எழுதப்படிக்கத் தெரிந்திருப்பவன் அதுகூட தெரியாதவனைப் பார்க்கிலும் மேலானவனுனல் ஒரு தேசத்திலுள்ளவ ரெல்லோருக்கும் எழுதப் படிக்கத் தெரிவது எவ்வளவு நலம் உண்டாகும். ஆனல் ஜனங்களுக்கு மூலாதாரப் படிப்பு கொடுப்பதினல் அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரிவதோடுங்கூட வாழ்க்கையில் சுகமும் நாகரீகமான நடவடிக்கைகளும் உண்டாகின்றன. அதினல் ஒவ்வொருவனும் நல்லொழுக்கமுள்ளவனுகவும் தொழில்செய்து திரவ்ய ஸம்பாதனத்தில் அதிக திறமையுள்ளவனுகவும் ஆகிருன். மேலும் ராஜ்யத்திலேயே அறிவும் ஞானமும் விருத்தியடைகின்றன. இப்பேர்ப்பட்ட சிரேஷ்டமான பலன்களை அற்பமாகப் பாவிப்பது தேஹஸௌக்யத்துக்கு அத்யாவச்யமான சுத்தமான காற்று, நல்ல வெளிச்சம் இவைகளுடைய பிரயோஜனங்களை ஸந்தேஹிப்பது போலாகும்.எந்தக்கவர்ன்மெண்டார் தங்களுடைய பிரஜைகளுக

கெல்லாம் கல்வி கொடுப்பது தங்கள் கடமை யென்று நினைத்துக்கல்வி கொடுத்துவருகிறூர்களோ அந் தக்கவர்ன்மெண்டார்தான் ஜனங்களுடைய க்ஷேமலாபங்களைக் கருதியவராவார்கள். இப்படிப் பார்க்கும் பக்ஷத்தில்,நம் கவர்ன்மெண்டாரும் ஜனங்களுக்குக் கல்வி கொடுக்கும் விஷயத்தில் தங்கள் கடமையை இப்போதைப்பார்க்கிலும் அதிகமாக ஏற்றுக்கொண்டால்தான் நம் ராஜாங்கத்தையும் நாகரீகராஜாங்கங்களிலொன்றூகச் சொல்லலாம். இந்தியாவில் ஜனங்களுடைய கல்வியின் அளவை யோசித்தாலும், அல்லது பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளைக் கணக்கிட்டுப்பார்த்தாலும், அல்லது கல்வியைப் பரவச்செய்ய பண்ணியிருக்கும் ஏற்பாடுகளைக் கவனித்தாலும், அல்லது எலிமெண்டரி படிப்பில் செலவிடும் திரவியத்தின் தொகையைப் பார்த்தாலும் இந்தியாவானது அன்னியநாடுகளுக்கு மிகவும் பின்தங்கி இருக்கிறது. எவ்வளவு பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியும் என்பதை யோசிப்போம். 1901ஹு ஜனக்கணக்கின்படி இந்தியாவில் படித்தவர்கள் 100க்கு ஆறுதானிருக்க ஐரோப்பா கண்டத்தில் படிப்பு விஷயத்தில் அதிக பின்தங்கியிருக்கும் ருஷியாவில்கூட 100க்கு 25 பேருக்குப் படிக்கத்தெரியும். ஐரோப்பாவில் அநேக தேசங்களிலும், அமெரிக்காவில் ஐக்யமாகாணங்கள், கானடா, தேசங்களிலும் ஆஸ்திரேலியாவிலும் படிக்கத்தெரியாதவர்களருமை பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகளின் கணக்கைப்

பார்ப்போம். ஐக்கியமாகாணங்களில் மொத்தஜனத்தொகையில் 100-க்கு 21 பேர்கள் எலிமெண்டெரி பள்ளிக்கூடங்களில் படித்து வருகிறார்கள். கனடா, ஆஸ்திரேலியா, ஸ்விட்ஸர்லாந்து, ப்ரிடிஷ் தீவுகள், இத்தேசங்களில் 100-க்கு 17-க்குமேல் 20 பேர்வரைக்கும் படித்து வருகிறார்கள். ஜர்மேனி, ஆஸ்திரியா—ஹங்கேரி, நார்வே, ஹாலண்டுதேசம், இவைகளில் 15-க்குக்குறையாமலும் 17-க்கு மேல்படாமலும் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிறார்கள்,பிரான்ஸு ஸ்வீடன் தேசங்களில் 100-க்கு 14 பிள்ளைகளும் டென்மார்க்கில் 13-ம், பெல்ஜியத்தில் 12-ம், ஜப்பானில் 11-ம், இட்டலி, கிரீஸ், ஸ்பெயின், இவைகளில் 8-க்குமேல் 9-வரையிலும் போர்ச்சுகல், ரஷியா தேசங்களில் 4-க்குமேல் 5-க்குள்ளும் படித்து வருகிறார்கள். ஆனால் இந்தியாவிலோ 100-க்கு 1.9-ஜனங்கள்தான் எலிமெண்டரி கல்விகற்று வருகிறார்கள்.இப்போது இந்தஎலிமெண்டரிப்படிப்பை எந்தெந்தத் தேசங்களில் எவ்வெவ்விதமாக ஊட்டுகிறார்களென்று பார்ப்போமானால், அநேகதேசங்களில் இப்படிப்பு சம்பளமில்லாமல் கட்டாயப்படுத்தியும், மற்றுசிலதேசங்களில் கட்டாயப்படுத்தாமற்போனாலும் சம்பளமே யில்லாமலும், அல்லது சொற்ப சம்பளத்திலேயும்அளிக்கப்பட்டுவர,இந்தியாவில் மாத்திரமே அக்கல்விகட்டாயமாயுமில்லை, இனமாகவுமில்லை. பிரிடிஷ் தீவுகள், பிராஞ்சுதேசம், ஜர்மனியா, ஸ்விட்ஸர்லாந்து, ஆஸ்திரியா, ஹங்கரி, இடலி, பெல்ஜியம்

டென்மார்க்கு, நார்வே, ஸ்வீடன், ஐக்யமாகாணங்கள் கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், இத்தேசங்களில் இப்படிப்பு பலவந்தத்துடன் தர்மத்துக்குச் சாதாரண மாக ஆறுவருஷம் கொடுக்கப்பட்டுவர, அமெரிக்காவில் சில மாகாணங்களில் இப்போது ஒன்பது வருஷகாலங் கூட அப்படியே கொடுக்கப்படுகிறது. ஹாலண்டில் இப்படிப்பு கட்டாயமே யொழிய தர்மமாகக் கொடுக்கப் படவில்லை. ஸ்பெயின், போர்த்துகல், கிரீஸ், பல்கேரியா, ஸர்வியா, ரொமேனியா தேசங்களில் எலிமெண்டெரி கல்வி தர்மமாயிருந்தாலும் சட்டப்படி பல வந்தமே யொழிய நடவடிக்கையில் கட்டாயமில்லை. டர்க்கியில் (Turkey) கூட கல்வி தர்மமாகவும் பேருக்காவது கட்டாயமாகவுமிருக்கிறது. ரஷ்யாவில் படிப்பு கட்டாயமா யில்லாவிட்டாலும் தர்மத் துக்கேயே அளிக்கப்படுகிறது. கடைசியாக நாம் மற்ற தேசங்களில் எலிமெண்டெரி கல்விக்காகச் செலவழிக்கப்படும் தொகைகளைக் கணக்கிட்டுப் பார்க்குமளவில் இந்தியாவில் கவர்ன்மெண்டாருக்குச் செலவேயில்லையென்று சொல்லலாம். ஐக்யமாகாணங் களில் எலிமெண்டெரி கல்வி விஷயமாகத் தலைக்கு 12 ரூபாய் வீதமும், ஸ்விட்ஸர்லாந்தில் ரூ 10-4-0 வீதமும், ஆஸ்திரேலியாவில் ரூ 8-7 வீதமும், இங்கிலாந்து வேல்ஸில் ரூ 7-8-ம், கனடாவில் ரூ 6-4ம், ஸ்காத்துலாந்தில் ரூ 7-3-6-ம், ஜர்மனியில் ரூ 5-2-6 ம் அயர்லாந்தில் ரூ 4-13-ம்,ஹாலண்டில் ரூ 4-12-ம்

ஸ்வீடனில் ரூ 4-3-ம், பல்ஜியத்தில் ரூ 4-ம், நார்வே யில் ரூ 3-13-ம் பிராஞ்சில் ரூ 3-10-ம், ஆஸ்திரே. யாவில் ரூ 2-5-6-ம், ஸ்பெயினியில் ரூ 1-6-ம்' இத்தாலியாவில் ரூ 1-3-6-ம் ஸர்வியாவிலும் ஜப் பானிலும் ரூ. 0-14-ம் ரஷ்யாவில் 0-7-7 வீதமும் செலவழிக்கப்படும்பொழுது இந்தியாவில் தலைக்கு ஒரு அணு கூட ஆகவில்லை.

ஸர்வஜனவித்தை (Universal education) யென் பது முற்றிலும் ஐரோப்பாவிலேயே உண்டானதாலும் இந்தியாவானது ஐரோப்பாவின் ஸம்பந்தம் பெற்று 100 வருஷங்களுக்குமேல் ஆகாததாலும், ஐரோப்பா வோடு இந்தியாவைக் கல்விவிஷயத்தில் ஒப்பிடுவது நியாயமில்லை யென்று சிலர் சொல்லக்கூடும். ஆனல் அது ஸரியல்ல. ஏனென்றல், ஐரோப்பியதேசங்களில் கூட ஸர்வஜன வித்தையென்பது சமீபத்திலேயே உண்டானது. ஆசியாவில் 50 வருஷங்களுக்குட்பட்டே ஐரோப்பியருடைய சம்பந்தத்தைப்பெற்றும் ஜப்பானி யர் ஸர்வஜன வித்தையைத் தங்கள் நாட்டில் ஏற்படுத் திய விஷயம் எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். கக்ஷிக் காக வேண்டுமானல் ஐரோப்பாவோடு இந்தியாவை ஒப்பிடக் கூடாதென்று வைத்துக் கொள்வோம். ஆனல் இந்தியாவைப் பிலிப்பெயின் தீவுகள், இலங்கை பரோடா இவைகளோடு ஒப்பிட என்ன ஆக்ஷே பனை யிருக்கக்கூடும்? பிலிப்பயின் தீவுகள் அமெரிக்கர் களாளுகைக்குட்பட்டு 13 வருஷங்களுக்கு மேலாக

வில்லை. புத்திகூர்மையிலாவது படிப்பிலுள்ள ஆசை யிலாவது பிலிப்பயின் நீவினர்கள் இந்தியர்களை விட உயர்ந்தவர்களென்று சொல்வதற்கிடமில்லை. ஆனு லும் சொற்பவருஷங்களுக்குள் இத்தீவினர்கள் ஸர்வ ஜனவித்தையில் அடைந்திருக்கிற அபிவிருத்தியானது அமெரிக்கர்களுடைய உத்ஸாஹத்தையும் ஸாமர்த் யத்தையும் நன்ருய்த் தெரிவிக்கிறது.ஸ்பெயின் தேசத் தாருக்குட்பட்டிருந்தபோது பிலிப்பெயினில் ஜனங் களுக்குக் கல்விகற்பிக்க ஒருவித ஏற்பாடுமில்லை. ஆனுல் இத்தீவுகள் அமெரிக்கர்களின் ஆளுகைக் கீழ்வந்த வுடனே எலிமெண்டரி கல்விக்கொடுப்பதற்கு ஒருஸரி யான ஏற்பாடு செய்யப்பட்டு, அவ்வேற்பாட்டின் பிர காரமே இப்போதுகூட கல்வி கொடுக்கப்பட்டு வருகி றது. இதின் கருத்தென்னவென்ருல் கீழ்க்கல்வியை எல்லோருக்கும் அளிக்கவேண்டுமென்பதே. பிலிப்பய னில் கல்வி தர்மமாகக் கொடுக்கப்படுகிறது. சட்டப்படி இதுவரைக்கும் கட்டாயமில்லாவிட்டாலும் உத்தியோ கஸ்தர்கள் இப்போது இப்படிப்பைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிருர்கள். இவ்விஷயத்தில் உத்ஸாகம் அதிகரித்து அநேக முனிசிபாலிடிகள் தங் களதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் படிப்பைக் கட் டாயப்படுத்திச் சொல்லிவைக்கிருர்கள். இம்மாதிரி தாங் களே சட்டம் செய்துகொள்வதற்கு முனிஸிபாலிடி களுக்கு அதிகாரம் உண்டாவென்பது ஸந்தேஹிக்க கூடியதானுலும் ஜனங்கள் அவைகளைச் சந்தோஷத்

துடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பிலிப்பெயின் தீவினர்கள் எவ்வளவு சீக்கிரத்தில் அபிவிருத்தியடைந்து வருகிறார்கள் என்பது 1903௵க்கு மேல் 1908௵க்குள் அடங்கிய ஐந்து வருஷங்களில் பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகளின் தொகை 150,000-த்திலிருந்து இரட்டித்து 360,000 ஆய்விட்டதென்பதினாலேயே தெரியவரும். பிரிட்டிஷ் இந்தியாவில் 100-க்கு இரண்டேபேர்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் போது பிலிப்பெயினிலோ 100-க்கு 6 பேர்கள் பள்ளிக்கூடம் போய்க் கல்வி கற்றுவருகிறார்கள்.

தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் அதிக வித்யாஸம் கிடையாது. ஆனால் ஸர்வஜன வித்தை விஷயத்திலோ லங்கை இந்தியாவைவிட எவ்வளவோ மேலான நிலைமையிலிருக்கிறது. கவர்ன்மெண்டு பள்ளிக்கூடங்கள், ஒத்தாசை பெறும் பள்ளிக்கூடங்களின் மூலமாக எலிமெண்டெரி கல்வி லங்கையில் பரவிவருகிறது. கவர்ன்மெண்டு பள்ளிக்கூடங்களில் வெகு காலமாக அட்டெண்டன்ஸ் கட்டாயமாயிருக்கிறது. பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்பத் தவறின தந்தையர்களை உபாத்தியாயர்கள் கிராமாதிகாரிகளுக்கு முன்கொண்டுபோய் அவர்களுக்கு ஸ்வல்ப அபராதம் விதிக்கச் செய்கிறார்கள். 1901௵த்தில் எலிமெண்டெரி கல்வி தேச முழுவதும் கட்டாயம் பண்ணப்பட்டது. 1905௵ நியமிக்கப்பட்ட கமிஷன் கீழே சொல்லப்படும் ஐந்து நிபந்தனைகளைச் செய்தது. அதாவது:—(1) கவர்னரால்

குறிக்கப்பட்ட இடங்களில் பையன்கள் எல்லாரும் கட்டாயமாக ஆறுவருஷகாலம் பள்ளிக்கூடம் போக வேண்டும். (2) பள்ளிக்கூடங்களில் சம்பளம் வஸூல் செல்யக்கூடாது. (3) பெண் கல்வியைக் கூட சீக்ரத்தில் விருத்தி செய்ய வேண்டியது. (4) தங்கள் தங்கள் ப்ரதேசங்களிலிருக்கும் பிள்ளைகளின் படிப்பைக் கவனித்துப் பார்க்க ஜில்லா கமிட்டிகளை ஏற்படுத்த வேண்டியது. (5) படிப்புக்காக ஒரு பண்டு ஏற்படுத்தும் பொருட்டு ஆரம்பமாக ரோட் வரியை ஜில்லா கமிட்டிவசம் ஒப்புவிக்கவேண்டியது. இக்கட்டாயப்படிப்பைப்பற்றி 1908ஆ ரிபோர்ட்டில் கவர்ன்மெண்டார் அதைப் புகழ்ந்து "இதுவரையிலும் கஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை. ஸர்க்கார் ஒத்தாசை பெறும் பள்ளிக்கூடங்களின் மானேஜர்கள் எதிர்பார்த்த ஸங்கடங்கள் ஒன்றும் ஸம்பவிக்க ஹேஷ்யமில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்புதிய ஏற்பாட்டின் பலனாக 1909ஆத்தில் மொத்தத்தில் 237,000 பிள்ளைகள் (அதாவது 100-க்கு 6. 6வீதம்) லங்கையில் பள்ளிக்கூடம் போய்வந்தார்கள்.

இந்தியாவிலேயும், பரோடா மஹாராஜா வித்யா விஷயத்தில் அதிக சிரத்தை யெடுத்துக்கொண்டு அதிக நன்மையைச் செய்து வருகின்றார். இவர் 18 வருஷங்களுக்கு முன்னே அமரேலி தாலூகாவில் 10 கிராமங்களில் எலிமெண்டெரி கல்வியைக் கட்டாயமாகவும் தர்மமாகவும் ஏற்பாடு செய்தார். பரிசோதனார்த்தமாக (Ex-

perimentally) இதனை எட்டு வருஷகாலம் பார்த்த பின், 1901-ம் வருஷத்தில் அத்தாலூகா முழுவதிலும், 1906-ம் வருஷம் பரோடா ராஜ்யமெங்கும் பிள்ளைகளுக்கு 6-வயதுக்கு மேல் 12-வரைக்கும், பெண்களுக்கு 6 வயதுக்குமேல் 10 வரையிலும் படிப்பு கட்டாயமாகவும் தர்மமாகவும் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றும் ப்ரஸாரம் செய்தார்கள். 1909ளூத்தில் மொத்தத்தில் பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகள் 165000. அதாவது தேச ஜனத்தொகையில் 100-க்கு 86 வீதமாகிறது. பள்ளிக்கூடம் போகிற வயதிலுள்ள பிள்ளைகளை மாத்திரம் கணக்கிட்டுப்பார்த்தால் 100-க்கு 79. 6 வீதமும், பெண்களில் 47. 6 வீதமும் படித்து வந்தார்கள். ஆனால் இந்தியாவிலோ பிள்ளைகளில் 100-க்கு $21\frac{1}{2}$ வீதமும், பெண்களில் 100-க்கு 4 வீதமுமே பள்ளிக்கூடம் போகிறார்கள். 1909ளூத்தில் பரோடாவில் பிரைமரி பள்ளிக்கூட விஷயமாக மொத்தத்தில் $7\frac{1}{2}$ லட்சம் ரூபாய் அதாவது தலைக்கு $6\frac{1}{2}$ அணு வீதம் செலவழிக்க இந்தியா கவர்ன்மெண்டாரோ தலைக்கு ஒரு அணு தான் செலவழிக்கிறார்கள். பரோடாதேசத்து ஜனங்களும் சுற்றியிருக்கும் பிரிட்டிஷ் ராஜாங்கத்து ஜனங்களும் ஒரே நிலைமையிலிருப்பவரானாலும், கெயிக்குவாரின் குடிகளுக்கும் பிரிட்டிஷ் குடிகளுக்கும் கல்விவிஷயத்தில் வித்யாஸம் அதிகமாகி வருகிறது.

லோகமுழுவதும் மூலாதாரக்கல்வி எப்படிப்பர

விற்று என்பதைப் பார்ப்போமானுல் ஒவ்வொரு ராஜாங்கத்தாராலும் கல்வியானது கட்டாயப்படுத்த படாமல் பரவச்செய்ய முடியவில்லையென்பது நமக்குத் தெரியவருகிறது. தான்தான் உயர்த்தி என்கிற அகங் காரத்தோடுகூடிய இங்கிலாண்டும் அதிககாலம் வரையில் கட்டாயப்படிப்புக்கு விரோதமாக நின்றும் கடைசியில் அதற்கு இணங்கும்படியாய்விட்டது. இங்கிலாந் தில் படிப்பைக் கட்டாயம்செய்த 1870ஆு ஆக்டை ஆலோசனை செய்யும்போது கிளாட்ஸ்டன் பிரபு (Gladstone) பின்வருமாறு பேசினுர்:—நாம் உயர்ந்த நாகரீகத்தையும் அளவற்ற ஐச்வரியத்தையும் பெற்றிருந்தும் கட்டாயப்படுத்தித்தான் ஜனங்களுக்கு வித்தை யளிக்க வேண்டிவருவது நம் தேசத்துக்கே ஒரு பெரிய அவமானம். ஆயினும் அப்படியே நடத்த வேண்டுமென்று ஒப்புக்கொண்டுவிட்டோம். நம் எண்ணம் நிறைவேறும்பொருட்டு அவஸரமில்லாமல் நன்கு ஆலோசித்து நாம் நடக்கவேண்டும்." இங்கிலாந்துவேல்ஸில் பள்ளிக்கூடம் போவதைக் கட்டாயப் படுத்தும்பொருட்டுச்செய்யப்பட்ட ஏற்பாடுகள் பலனை யடைந்தனவாவென்று நிர்ணயிக்க நியமிக்கப்பட்ட ராஜகீய கமிஷன்தார்கள், "பள்ளிக்கூடங்களுக்குப் போகும் பிள்ளைகளின் தொகை அதிகமானதற்குக் காரணம் கட்டாயப்படுத்தப்பட்டதேயொழிய வேறில்லை. நமக்குமுன் அதைப்பற்றி அபிப்ராயம்கொடுத்தவர்களுக்குள் ஸ்டீவர்ட்டென்பவர்மாத்திரம் வேண்டியபாடசாலை

களிருந்தால் ஜனங்கள் நிர்ப்பந்தமில்லாமல் தானுகவே பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்புவார்கள்என்று சொன்ஞர். கட்டாயத்தினுல் பாடசாலைக்குப்போகும் பிள்ளைகளின் தொகை ஏறியிருப்பதை அளவிட அப்பலவந்தத்தின் அனுஸரணையை மூன்றுவகுப்பாகப் பிரித்துப் பேசவேண்டும். முதலாவது, சில தாய் தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளின் வித்யாபிவிருத்தியையும், க்ஷேமத்தையும் அலக்ஷ்யம் செய்து, பிள்ளைகள் வேலைசெய்து ஸம்பாதித்துக் கொண்டுவரக்கூடிய பணத்திலேயே கண்ணு யிருக்கிருர்கள். இவர்களைக் கட்டாயப் படுத்துவதால் கைமேற் பலனுண்டு. இரண்டாவது, அநேக தாய் தந்தையர்கள் மிகவும் அச்ரத்தையுள்ளவர்களாய்ப் பிள்ளைகள் பாடசாலைக்குப் போகமாட்டேனென்ருல் பிள்ளைகளைக்கண்டிக்காமல் அவர்களுக்கிணங்கி விடுகிருர்கள். ஆனல் மாஜிஸ்டிரேட்டார் முன்போய் நிற்க வெட்கித்துப் பயத்தினுல் ஒருவாறு தங்கள் கடமைகளை நிறைவேற்றுகிருர்கள். மூன்ருவது, பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டியது கட்டாயமென்று சட்டம் ஏற்படுத்தின பிறகு அச்சட்டம் ஸரியானதென்று ஒத்துக்கொண்டு தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாமற் போனுல் தங்களைச் சட்டத்துக்கு மீறி நடந்தவர்களென்று ராஜாங்கத்தார் நினைப்பாரெனப் பயந்து தங்கள் கடமைகளைச் செலுத்தி வருகிருர்கள்" என்பதாகக்

கமிஷன்தார்கள் ரிப்போர்ட்டு செய்திருக்கிறார்கள். லங்கையிலும் 1905ஹு கட்டாயச் சட்டம் ஏற் படுத்தவேண்டுமோவென்ற கேள்விவந்தபோது "இரண் டொரு ஜில்லாக்களில் தவிர பிள்ளைகளைப் பாடசாலைக் கனுப்பத்தான் வேண்டுமென்ற கட்டாயமில்லாமற் போனால் பிரயோஜனமில்லை; ஹாலண்டு தேசத்தவ ரும் தங்களாளுகைக்குள்ளிருந்த இடங்களில் அநேக பள்ளிக்கூடங்கள் வைத்து, பிள்ளைகளை அனுப்பாத தந்தைமார்களுக்கு அதிக அபராதங்கள் விதித்துக் காரி யல் நடத்திவந்தார்கள். எங்கேபோனாலும் தந்தையர் களும் பிள்ளைகளின்பேரில் ஒருவித அதிகாரமுமில்லா மல் அவர்களை இஷ்டப்படி விடுவதால் பாடசாலைக்குப் பிள்ளைகள் ஸரியாக வருவதில்லை. சட்டத்தின் நிர்ப்பந் தத்தால்தான் பிள்ளைகளுக்கு க்ஷேமமுண்டாகும்" என்று லங்கை வித்யாகமிஷன்தார்கள் சொல்லி யிருக்கிறார்கள். கட்டாயப்படுத்திப் படிப்பு சொல்லி வைக்க வேண்டுமோவென்பதைப்பற்றி ஸந்தேஹப்படக் கூடியகாலம் கழிந்துவிட்டது. 50-வருஷ காலமாக இந்தியாவில் கட்டாயமில்லாமல் ப்ரைமரிபடிப்பு கொடுக்கப்பட்டு வருகிறது.

இதனால் நாம் எவ்வளவு விருத்தி யடைந்திருக்கி றோம்? எட்டுபேரில் ஏழுபேருக்குக் கையெழுத்துக் கூடப் போடத்தெரியாது. ஐந்து கிராமங்களுக்கு 4கிரா மங்களில் பாடசாலை யென்பதே கிடையாது. ஆனால் சென்ற ஆறேழு வருஷங்களில் ஏதோ கொஞ்சம்

விருத்தி காண்பித்தாலும், நாம் எவ்வளவு மெதுவாகப் போகிறோமென்பது இரண்டு வருஷங்களுக்கு முன் கொண்டுவரப்பட்ட ஆரஞ்சு துரையவர்களின் ரிபோர்ட்டிலிருந்து தெளிவாகும் "ப்ரைமரி படிப்பு தேசமெங்கும் பரவுவதற்குமுன் நாம் எவ்வளவு வேலை செய்யவேண்டுமென்பதைப் பார்த்தால், நாம் சென்ற ஐந்துவருஷங்களிலாவது அல்லது இருபத்தைந்து வருஷங்களிலாவது அடைந்திருக்கிற விருத்தி ஒரு அணுக்கூட இல்லை. இம்மாதிரியாகவே கல்வி விருத்தியானால், ஜனத்தொகை அதிகமாகாது என்று வைத்துக் கொண்டாலும், எல்லாப் பிள்ளைகளும் பாடசாலைக்கு வருவதற்குப் பல தலைமுறைகள் பிடிக்கும்." இதை நிவர்த்திசெய்ய நாம் வழிகள் தேடவேண்டுவதவசியம். இதர தேசத்தார்களைப் போல இந்தியர்களும் ஸுக மனுபவிக்க வேண்டுமானால் நாம் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளவேண்டும். கட்டாயப்படிப்புஎன்னும் மாளிகையைக் கட்டி முடிக்க ஒருதலைமுறையானாலும் அஸ்திவாரமாவது நாம் போடவேண்டும். 1870 வருஷத்தில் இங்கிலாந்தில் கட்டாயப்படிப்புச் சட்டம் முதலில் கொண்டுவந்தபோது பாடசாலைக்குப் போக வேண்டிய பிள்ளைகளில் 100-க்கு 43 பேர்கள்தான் படித்து வந்தார்கள். எல்லாப்பிள்ளைகளையும்பாடசாலைக்குக் கொண்டுவர பத்துவருஷங்களாயின. இதே சட்டம் ஜப்பானில் கொண்டுவந்தபோது 100-க்கு 28 பேர் தான் பாடசாலை போய் வந்தார்கள். எல்லாப்பிள்ளை

களும் படிப்பு பெறுவதற்கு 20வருஷங்கள் பிடித்தன நம் தேசத்திலோ மற்ற தேசங்களில் விட கஷ்ட நிஷ்டூரங்கள் அதிகம். ஆகையால் விருத்தியும் தாமஸமாய்த் தான் வரும். ஆனல் நாம் இப்போது ஆரம்பம் மாத்திரம் செய்து, நம்மனேபீஷ்டத்தைக் கண்முன்னே வைத்துக்கொண்டு விடாமுயற்சியுடன் காரியங்களை ஸாதித்தால் அக்காரியம் ஸித்திபெறத்தான் வேண்டும். நாளடைவில் வேலை சுளுவாகும். இத்தேசத்தில் படிப்பைக் கட்டாயப்படுத்துவது சரியல்லவென்று ஆக்ஷேபிக்கிறவர்கள், ஹிந்து ராஜாவாகிய கைக்குவார், தன் ராஜ்யத்தில் ஒருவித பெரிய இடையூறுமில்லாமல் படிப்பைக் கட்டாயப்படுத்தினபோதிலும், அந்நியதேசத்தாராகிய பிரிட்டிஷ் துரைத்தனத்தார் இப்பேர்ப்பட்டசட்டம்செய்து ஜனங்களுடைய விரோதத்தைச்சம்பாதிப்பது தகுதியல்லவென்கிருர்கள். இது காரணபூதமான பயமென்று எனக்குத்தோன்றவில்லை. ஏனென்ருல் இந்திய துரைத்தனத்தாரைப்போல இலங்கை துரைத்தனத்தாரும் அன்னிய தேசத்தினராலும் பயப்படாமல் இவர்கள் கட்டாயப்படிப்பை ஏற்படுத்தவில்லையா? ஆனல் இப்பேர்ப்பட்ட ஆக்ஷேபனைகளுக்கிணங்கி, ஆச்ரிதஸம்ஸ்தானங்களை (Feudatory States) யொத்திருக்கிற பிரிட்டிஷ் இந்திய ஜில்லாக்களில், லோகல் போர்டார்களுக்கு அதிகாரம் கொடுத்து அவர்களை வேண்டியஏற்பாடுகளைச்செய்யச்சொன்னல் எனக்குத் திருப்திதான். இதில்கூட, அதிக நாகரீகம்

பெற்ற ஜில்லாக்களில் பொறுக்கி எடுத்த இடங்களில் ஆரம்பம் செய்வதில் எனக்கு இஷ்டந்தான். கட்டா யப்படிப்பு அவசியம் என்னும் அபிப்ராயம் எல்லா ஜனங்களுக்கும் ஸஹஜமாய்விட்டால் ஸர்க்காரர் அத ற்கு மேற்பட்ட ஏற்பாடுகளைத் தயங்காமலும், பயமில் லாமலும் எடுத்துக்கொள்ளலாம். பெண்களுக்குக்கூட இப்படிப் படிப்பைக் சட்டாயப்படுத்துவதில் கொஞ்சம் கஷ்டமிருக்கக்கூடும். ஆகையால் ஆண்பிள்ளைகளுக்கு மாத்திரம் இப்போது இந்தப் பில்லை (Bill) நாம் அமு லுக்குக் கொண்டுவர எனக்கு ஆக்ஷேபனை யில்லை. ஆனால் பிள்ளைகளைப் படிக்கவைக்கிறதைப் பார்க்கிலும் பெண்களைப் படிக்கவைக்க வேண்டியது நமக்கு அத் தியாவசியமென்று எனக்குத் தோன்றுகிறது. கொஞ்ச வருஷங்களுக்குள் பெண்களுக்குக்கூட கட்டாயப் படிப்பைக் கொடுக்க வேண்டிய ஸமயம் வருமென்று எதிர்பார்க்கிறேன். லோகல் சங்கத்தார் (Local bodies) களுக்கு அதிகாரத்தைக் கொடுத்தால் அவர்கள் அத்யுத் ஸாகத்தினால் தப்புவழியில் போவார்களென்று சொன் னால் அவர்களை அடக்கி வைத்துக்கொள்ள ராஜதானி கவர்ன்மெண்டாரும் இந்தியா கவர்ன்மெண்டாரும் தங்கள் கைகளிலேயே அநேக அதிகாரங்களை வைத்துக் கொள்ளலாம். நான் மன்றாடிக் கேட்கிற தென்னவென் றால் இந்த முக்கியமான எலிமெண்டெரி கல்வி விஷ யத்தில் ஆரம்பமாவது செய்வதில் காலதாமஸமாகக் கூடாதென்பது தான்.

இப்போது நான் கொண்டு வந்திருக்கிற பில்லி லுள்ள நிபந்தனைகளைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லுகிறேன். இந்தப் பில் மேற்சொல்லிய ஆக்ஷேபனைகளை யோசித்தே தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பில் கேவலம் அனுமதியை மாத்திரம் கொடுக்கிறது. இதனால் முதலில் பிள்ளைகள் விஷயத்திலும் நாளடைவில் பெண்கள் விஷயத்திலும் தங்கள் தங்கள் விசாரணைக்குட்பட்ட விடங்களில் படிப்பைக் கட்டாயமாய்ச் செய்வதற்கு முனிஸிபாலிடியாருக்கும் ஜில்லா போர்டாருக்கும் அதிகாரம் கொடுக்கப்படுகிறது. ஒரு லோகல் சங்கத்தார் இந்தப் பில்லில் கூறிய அதிகாரங்களைச்செலுத்த ஆசைப்படுவதற்குமுன் ஏற்கனவே அவர்களுடைய பிரதேசத்துக்குள் எவ்வளவு தூரம் கல்வி வியாபித்திருக்க வேண்டுமென்பதைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிற விதிகள் பூர்த்தியாய் அமைந்திருக்கவேண்டும். சென்றவருஷம் இந்த விஷயமாக நான் தீர்மானம் கொண்டுவந்தபோது பாடசாலைக்குப் போகவேண்டிய பிள்ளைகளில் மூன்றிலொருபங்கு படிப்பு பெற்று வந்தால் அப்பிரதேசத்தில் படிப்பைக் கட்டாயப்படுத்தலாமென்று சொன்னேன். அது சரியானதென்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் இந்தியா கவர்ன்மெண்டார் தங்களிஷ்டப்படி இந்தப் பரிமாணத்தை உயர்த்தலாம்.காலஸ்திதியைப்பார்த்தால் 100-க்கு 33 என்கிற பரிமாணத்தையே வைத்துக்கொள்ளும் பக்ஷத்தில்

சில பெரிய முனிஸிபாலிடிகளைத் தவிர பாக்கி சிறிய முனிஸிபாலிடிகளும், எல்லா ஜில்லா போர்டுகளும் நம் கணக்கில் வராது. மேலும் ஒரு பிரதேசச்சங்கம் இந்தக் கணக்கில் அகப்பட்டாலும், ராஜதானி கவர்ன் மெண்டாரின் அநுமதியைப் பெற்ருல்தான் இந்தப் பில்லின் பிரயோகத்துக்குள் வரும். இந்தப் பில்லின் பிரகாரம் கட்டாயமாய் பாடசாலைக்கு வரவேண்டிய காலம் நான்கு வருஷங்கள் தான். அநேக தேசங்களில் இது 6 வருஷமாய் இருக்கிறது. இலங்கை, பரோடாவில் கூட 6 வருஷம். இத்தாலியாவும் ஜப்பானும் முதலில் 3 வருஷம் விதித்து இப்போது அதை ஆறு வருஷமாக்கிவிட்டார்கள். ஆனால் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் இதனால் உண்டாகும் செலவு ஆனதால் 4 வருஷத்துக்குக் கட்டாயப்படிப்பை விதித்தால் போதும். இன்னொரு விஷயம் நன்ருய் கவனிக்கவேண்டியது. அதாவது வியாதி கிருககாரியம் அல்லது வியவசாயச் சம்மந்தமாய்ப் பருவகாலங்களில் நேரிடும் ஆவச்யகங்கள் இப்பேர்ப்பட்ட நியாயமான காரணங்களிலிருந்தால் பாடசாலைக்குப் போகாமலிருக்கலாம். தாய் அல்லது தந்தை மதசம்பந்தமான சிக்ஷைக்கு ஆக்ஷேபிக்க இடமில்லாத கல்விச்சாலையொன்று பிள்ளையின் வீட்டிலிருந்து ஒரு நியாயமான தூரத்தில் இல்லையென்பதைக்கூட ஒரு காரணமாகக் கொண்டுவரலாம். ஒருமைல் சரியான தூரமென்று நான் பில்லில் போட்டிருக்கிறேன். ஆனால் இது சில

லரைவிஷயம். இதை ராஜதானிகவர்ன்மெண்டார் அதிகாரத்துக்கு விட்டுவிடலாம். இந்தப் பில்லின் நிபந்தனைகளை யாதொரு பிரதேசத்துக்குப் பிரயோகிக்கக்கூடிய ஸமயம் வந்தால், ராஜதானி கவர்ன்மெண்டாரின் கல்வி டிபார்ட்மெண்டார். (Education Department) விதித்திருக்கிற சட்டங்களின்படி அந்தப்பிரதேசத்துக்கு வேண்டிய பாடசாலைக் கட்டிடங்களைப் பிரதேசச் சங்கத்தார் கட்டிக்கொடுக்க வேண்டும். பிள்ளைகளின் சம்பள விஷயத்திலோ, கட்டாயப்படிப்பு ஏற்படுத்தினால், வித்தை கற்பிப்பதும் இனமாக விருக்கவேண்டுமென்று நான் நினைத்தாலும், தாய் தந்தையர்களுக்குமாஸச்சம்பளம் 10 ரூபாய்க்குக் குறைந்திருந்தால், அப்பிள்ளைகளுக்கு மாத்திரம் சம்பளம்வஜா செய்தால்போதும். 10 ரூபாய்க்கு மேல்பட்ட சம்பளக்காரர்களின்பிள்ளைகள் சம்பளம்கொடுக்கவேண்டுமோ வேண்டாமாவென்பது லோகல் சங்கத்தாரின் இஷ்டம். பல லோகல் கவர்ன்மெண்டார்கள் பிரைமெரி பாடசாலைகளிலிருந்துவரும் பணம்கூட ஸர்க்காருக்கு அவச்யமான வரும்படி, சம்பளத்தை வஜா செய்கிறது சரியல்லவென்று சொல்லுகிறதால் சம்பளத்தை எல்லாப்பிள்ளைகளுக்கும் வஜா செய்யவேண்டாம். பாடசாலைக்குப் பிள்ளைகளைப் போகச்செய்வதற்கு ஒரு ஸ்கூல் அட்டண்டன்ஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி ஏற்படுத்தவேண்டும். இந்தக் கமிட்டியார் தங்கள் பிரதேசத்தில் பள்ளிக்கூடங்களுக்குப் போகவேண்டிய

பிள்ளைகளை ரிஜிஸ்டரில் பதிந்து பிள்ளைகளைப் பாட சாலைக்குக் |கொண்டுவருவதற்கும் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பாத தாய்தந்தையர்களுக்கு அபரா தம் போடுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அபராதங்களோ மிகவும் ஸ்வல்பமானவை. பத்து வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளை வேலைக்கு ஒருவரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த ரூலை மீறி நடப்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். கடைசியில் எல்லாப்பிள்ளைகளையும் கட்டாயப்படுத்திப் பாடசாலைக் குக்கொண்டுவருவதில் ஸர்க்கார் செலவு அதிகமாகுமாத லால் ராஜதானி கவர்ன்மெண்டார் எவ்வளவு கொடுக்க வேண்டியது லோகல் சங்கத்தார் எவ்வளவு கொடுக்க வேண்டியது என்று இந்தியா கவர்ன்மெண்டார் விதிக்கவேண்டியது. இதற்காக ராஜதானி கவர்ன் மெண்டாருக்கு வேண்டிய கிராண்டு கொடுக்க வேண்டும். லோகல் சங்கத்தாருக்கும் அவச்ய மானல் ஒரு விசேஷ வித்யாவரி போட்டு வஸூல் செய்ய அதிகாரம் கொடுக்கவேண்டி யது. கட்டாயப்படிப்பு ஏற்படுத்தின பிரதேசங்களில் கல்விவிஷயமாகச் செய்யவேண்டிய செலவில் ஸர்க்கா ரார் பெரும்பான்மையான பாகத்தை வகித்தால்தான் இந்தப் பில் பலனைப்பெறும்.

இங்கிலாந்தில் எலிமெண்டெரி பாடசாலைகளுக்குப் பார்லிமெண்டார் கொடுக்கும் கிராண்டு அப்பாடசாலை களுடைய மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு

பங்குக்குக்கிட்டிவருகிறது. ஸ்காத்துலாந்தில் கிராண்டு இன்னும் அதிகம். அயர்லாந்திலோ அநேகமாக முழுச்செலவும் பார்லிமெண்டு கிராண்டிலிருந்துதான். ஆகையால் இந்தியாவில் புதிதாய்ச் செய்ய வேண்டிய செலவில் மூன்றில் இரண்டுபாகம் ஸர்க்காரார் கொடுப்பது நியாயமே.

என் பில் முழுவதும் இவ்வளவுதான். ஜனங்களை அஞ்ஞானத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டுமானால் இந்தப் பில்லைப்பிரயோகத்துக்குக் கொண்டுவருவதில் எவ்வளவு கஷ்டமிருந்தாலும் நாம் இப்போது ஆரம்பத்தையாவது செய்யவேண்டும். இப்போது இந்தப்பில்லைக் கவுன்ஸில் முன் கொண்டுவர உத்தரவு கொடுத்தால் அதுதிரும்பி நம் ஆலோசனைக்கு வர ஒருவருஷம் பிடிக்கும். இடையில் தேசமுழுவதும் எல்லாவித ஜாதியாரும் இந்தப் பில்லிலுள்ள நிபந்தனைகளை ஜாக்கிரதையாய்ப் பரிசோதிக்கக் காலமிருக்கிறது. கல்வியானது தேசமெங்கும் வியாபிப்பது, கவர்ன்மெண்டாரும் தேசத்திலுள்ள பிரமுகர்களும் ஒன்றுசேர்ந்து மனப்பூர்வமாய் ஒருவரையொருவர் கலந்து ஆலோசிப்பதைப் பொறுத்திருக்கிறது.

முதல் முதல் கல்வியைப் பரவச்செய்வதைக் கவர்ன்மெண்டார் தங்கள் கடமையாகக் கொள்ளவேண்டும். இரண்டாவது இதற்கு வேண்டிய பணச்செலவுசெய்வதற்குப் பின்வாங்கக்கூடாது. ஜனப்பிரமுகர்களும் கஷ்டங்களைப் பொருட்டாக எண்ணாத உத்ஸாகத்தோடும்,

ஜன விரோதத்துக்குப் பயப்படாத தைர்யத்தோடும் வேண்டுமானல் தங்கள் பணத்தையும், காலத்தையும் தேஹச்ரமத்தையும் பாராமல் வேலை செய்யவேண்டும். கவர்ன்மெண்டார் அந்நிய தேசத்தாரானலும் தாங்கள் தேசாபிமான முள்ளவர்களென்று, தேசஸ்தர்களின் க்ஷேமத்தைக் கருதி தாங்கள் மேல் போட்டுக்கொள்கிற கடமைகளாலும் கார்யங்களாலும் காண்பித்துக் கொள்ளவேண்டும். குடிகளும் ஸர்க்காரை அந்நிய தேசத்தாராக நினைக்காமல் அவர்களுக்கு, தேசத்தில் ஸமாதானத்தை ஸ்தாபித்து ஜனங்களுக்கு மேன்மேலும் நன்மைசெய்வதில் வேண்டிய ஒத்தாசையைக் கொடுக்கவேண்டும். கவர்ன்மெண்டாரும் குடிகளும் ஒன்றுசேர்ந்து தேச நன்மைக்காகச் செய்யக்கூடிய அநேக கார்யங்களுக்குள், கஷ்டப்படுகிற ஜனங்களுக்கு ஞானமும், நாகரீகமும் தைர்யமும் தரக்கூடிய கல்வியைத் தேசமெங்கும் பரவச்செய்வதைக் காட்டிலும் வேறில்லை. இனிமேலாவது காலதாமதமின்றி ஆரம்பஞ்செய்து ஸர்க்காரும், ஜனங்களும் விடா முயற்சியோடும் மனப்பூர்த்தியாயும் வேலை செய்தால் இன்னெரு தலைமுறைக்குள் நம்காரியம் ஸித்திபெறும். இவ்வளவு மாத்திரம் நாம் செய்தால் நமக்குப் பின் வருபவர்கள் அதை ஸம்பூர்ண நிலைமைக்குக் கொண்டு வர தைர்யத்தோடு வேலை செய்யலாகும். நம்மைப் பொறுத்த அளவில், முடிவை நாம் கண்டு களிக்காவிடினும் ஸம்பூர்ணத்துக்கு வேண்டிய அஸ்திவாரங்களைப்

பலமாய்க்கட்டினேம் என்கிற மனத்திருப்தி யிருந்தால் போதும். "தூரத்திலுள்ள காட்சியை ஒரு பாய்ச்சலில் போய்ப் பார்க்க நான் ஆசைப்படவில்லை; ஒரு அடி எடுத்துவைத்தால் போதும்" என்று ஒருவித்வான் சொன்னதில் விசேஷ அர்த்தம் இருக்கிறது இவ்வாறு கனம் ம-ா-ா ஸ்ரீ கோகலே பேசி முடித்தார்.

வர்கள் சம்பளமே கொடுக்கவேண்டாம். [9]

4. போலீஸாருக்கு இதில் சம்பந்தமில்லை: பிள்ளைகளைச் சரிவரப் பாடசாலைக்கு வரச் செய்ய ஒரு ஸ்பெஷல் ஸ்கூல் கமிட்டி: கட்டாய விஷயத்தைப் பற்றிய ரூல்கள் போலீசாரினால் பிரயோகிக்கப்பட மாட்டா. இதற்காகவே ஸ்பெஷல் கமிட்டிகள் ஏற்படுத்தப் படும். [10]

5. தண்டனைகள் இலேசானவை: போதுமான எச்சரிக்கைக்குப் பிறகு தாய் அல்லது தந்தைக்கு முதல் தடவை இரண்டு ரூபாய்வரை அபராதம் போடலாம். பிறகு ஒவ்வொரு தவறுதலுக்கும் பத்து ரூபாய் வரை போடலாம். [11, 12, 13]

6. மதசம்பந்தமான ஆக்ஷேபனைகள் அங்கீகரிக்கப்படும்: ஒரே பள்ளிக்கூட மிருந்து அங்குச் சொல்லிவைக்கிற மதத்துக்கு ஆக்ஷேபனை யிருக்கும்பக்ஷத்தில் அங்குப் பிள்ளைகளை யனுப்பவேண்டாம். [5 a]

7. பாடசாலைக்கு வராததற்கு: கீழே சொல்லிய காரணங்கள் மன்னிக்கத் தக்கதாகும்.

(1) வீட்டுக்காரியம்

(2) பிள்ளைக்கு வியாதி

(3) பருவசம்பந்தமான வியவசாயவேலை

(4) ஒருமைல் தூரத்துக்குள் பாடசாலை யில்லாமை

(5) வீட்டில் குழந்தைக்குச் சரிவரப் படிப்பு சொல்லிவைத்தல்

(6) அல்லது வேறு நியாயமான காரணம் [8]

8. குழந்தைகளை வேலையில் அமர்த்திக்கொள்ளக்கூடாது: பள்ளிக்கூடத்திலிருக்கவேண்டிய குழந்தைகளை வேலையில் வைத்துக் கொள்ளக் கூடாது. அப்படி அமர்த்தினால் தண்டனை விதிக்கப்படும். [6, 14, 19]

9. நாலே வருஷங்கள்: 6 வயதுக்கு மேற்பட்டு 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தான் பாடசாலைக்கு வரச்சொல்லுவது. பரோடா, இலங்கை, இன்னும் மற்ற தேசங்களில் கட்டாயப் படிப்பின் காலம் 6 வருஷத்துக்குக் குறைவில்லை. [4]

10. பாடசாலைகளின் குணம்: கல்வி டிபார்ட்டுமெண்டார் பாடசாலைகளை ஆமோதிக்க வேண்டியதும் தவிர, பாடசாலைக்கு வேண்டிய கட்டடம் கட்டும் மாதிரியையும் குறிப்பிடுவார்கள். [47]

11. கவர்ன்மெண்டார் மேல் பார்வை: கவர்னர்-ஜெனரலும் அவர் சபையோரும் சட்டங்களைச் செய்வார்கள். ராஜதானி கவர்ன்மெண்டார் கட்டாயப்படிப்பு ஏற்படுத்த வேண்டிய பிரதேசங்களைக் குறிப்பிடுவதையும், உபநூல்களையும் வித்யாவரி விதிப்பதையும் ஸாங்ஷன் செய்யவேண்டும். [3, 8, 18 219]

12. செலவு: கவர்ன்மெண்டாருக்கும், லோகல் சங்கத்தாருக்கும் விபாகிக்கப்படும். அதிகச் செலவைப் பொறுப்பதற்கே லோகல் சங்கத்தார் வித்யாவரி விதிக்கலாம். [8]